இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 07.04.2026



# காங்கிரஸ் தலைவர் இராஜாராம் அளித்த விளக்கம்!

பெருந்தலைவர் காமராசரின் உடல் அடக்கம் செய்ய கடற்கரையில் இடம் தர மறுத்தார் கலைஞர் என்ற அபாண்டமான பழியைச் சொல்லி இருக்கிறார் பச்சைத் துரோகி பழனிசாமி. தனது வாழ்க்கையில் முதன்முதலாக இப்போதுதான் பெருந்தலைவர் காமராசர் பெயரை உச்சரிக்கிறார் பழனிசாமி.

பழனிசாமி சொல்வது பச்சைப் பொய் என்பதை வரலாறு அறிந்தவர்கள் நன்கு அறிவார்கள். எதையும் அறிந்து புரிந்து கொள்ளும் திறமற்ற பழனிசாமிக்குச் சொன்னாலும் புரியாது.

**பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு 1975 அக்டோபர் அன்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அப்போது, ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், சட்டமன்ற மேலவை எதிர்க்கட்சித் தலைவருமான கே.இராஜாராம் (நாயுடு) அவர்கள் ஆற்றிய உரையைப் படித்தால் முழு உண்மையும் அறியலாம்.**

“பெருந்தலைவர் காமராசர் அவர்கள் சாதாரண தொண்டராக இருந்த காலத்திலிருந்து எனக்கும் அவருக்கும் நட்பு உண்டு. அவரும் நானும் பல கிராமங்களுக்கு கால்நடையாகவே சென்று பேசியிருக்கிறோம்” என்ற பீடிகையுடன் தொடங்கும் கே.இராஜாராம் அவர்கள், பெருந்தலைவர் மறைந்த அன்று என்ன நடந்தது என்பதைச் சொல்கிறார்....

**“அக்டோபர் 2 இரவில்...பெருந்தலைவர் காமராசர் மறைந்த அன்று, நமது மாநில அரசை நடத்தும் முதலமைச்சர் கலைஞர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் உடனே அவரது வீட்டுக்குச் சென்றனர். தங்களின் சகோதரர்களில் ஒருவர் இறந்துவிட்டதைப் போல, அந்த இடத்தில் அவர்கள் இருந்தார்கள். ‘மற்றொரு கட்சித் தலைவர் இறந்து விட்டார்’ என்று அவர்கள் நினைத்ததாகத் தெரியவில்லை.**

முதலமைச்சர் அவர்கள் எங்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டு துக்கம் தாளாது அழுதார். என்னுடைய உயிர் உள்ளவரை இது மறக்க முடியாது. அவ்வளவு பாச உணர்ச்சியை அவர் காட்டினார். காமராசர் அவர்களிடம் இருந்து எப்படி இந்த பாச உணர்ச்சியை அவர் பெற்றார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழக ஆளுநர் அவர்களும் முதலமைச்சர் பக்கத்தில் அமர்ந்துகொண்டு தேம்பித் தேம்பி அழுதார்.

**தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் காமராசருடைய பிரேதம் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, அங்கேயே எரித்து, நினைவுச்சின்னம் கட்டுவது என்றுதான் முதலில் முடிவு செய்யப்பட்டது.**

**‘காமராசரின் உடலை ராஜாஜி ஹாலுக்குக் கொண்டுபோய் வைக்க வேண்டும். முதலமைச்சரிடம் அனுமதி கேளுங்கள்’ என்று சிலர் சொன்னார்கள். எப்படி அனுமதி கேட்பது என்று யோசித்த விநாடியே முதலமைச்சர் அவர்கள், காமராசர் வீட்டுக்கே வந்துவிட்டார்.**

**‘இங்கே கூட்டத்தைச் சமாளிக்க முடியாது. உடனே ஐயாவை ராஜாஜி ஹாலுக்குக் கொண்டுபோக வேண்டும்’ என்றார்.**

நாங்கள் கனவு கண்டதைப் போல, நாங்கள் எதிர்பார்த்ததைப் போல முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் மனதில் உள்ளதை எப்படி அவர் தெரிந்து கொண்டார் என்று இன்றுவரை எனக்குத் தெரியவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும், எனக்கும், என்னுடைய சகாக்களுக்கும் என்ன கைம்மாறு செய்வது என்றே புரியவில்லை.

**காமராசரின் உடலை ராஜாஜி ஹாலுக்குக் கொண்டு வந்து, பொதுமக்கள் வந்து செல்ல ஏற்பாடு செய்துவிட்டு, தலைவர்கள் அமர மேடை அமைத்துக் கொண்டிருந்த நேரத்தில், ‘மந்திரிசபை இங்குதான் கூடுகிறதோ?’ என்கிற வகையில் எல்லா அமைச்சர்களும் அங்கே வந்துவிட்டார்கள். காமராசர் உடலை எங்கு வைத்து எரிப்பது? அடுத்தடுத்த காரியங்கள் என்ன? நாங்கள் எல்லாம் கூடி ஆலோசனை செய்து கொண்டிருந்தோம். ‘கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்திற்குப் பக்கத்தில் எரிக்க வேண்டும்’ என்று முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள்.**

அன்று இரவு எட்டு மணிக்கு, கனமழை பெய்து கொண்டிருந்தது. அப்போது முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய காரில் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி காரியதரிசியையும் என்னையும் அழைத்துக்கொண்டு கிண்டி காந்தி மண்டபம் சென்றார்.

**வெளிச்சம் இல்லாத அந்த இடத்தில், நாங்கள் சென்ற கார்களைத் திருப்பி நிறுத்தி அதன் விளக்கு வெளிச்சத்தில் இடத்தைத் தேர்வு செய்தார். இதை அதிகாரிகளே செய்யலாம். ஆனால் முதலமைச்சர் அவர்கள் எங்களை அழைத்துக் கொண்டு தன்னுடைய நேரடிப் பார்வையில் இவற்றையெல்லாம் செய்தார்கள்.**

**அனைத்து அமைச்சர்களும் இரவெல்லாம் தூக்கமில்லாமல் அங்கு அடர்ந்திருந்த மரங்களை, புதர்களை அகற்றி, தகனத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். இதற்கெல்லாம் என்ன கைமாறு செய்வது என்று எங்கள் கட்சிக்காரர்களுக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இதை என்றுமே மறக்க முடியாது. அன்றைய தினம் தமிழ்நாடு அரசிடமிருந்து அப்படியொரு அரசு மரியாதையை நாங்கள் எதிர்பார்க்கவில்லை.” (முரசொலி, 24.10.1975) என்று பேசி இருக்கிறார் கே.இராஜாராம் அவர்கள். இதைப் படித்தாவது பழனிசாமி தனது பொய் முகத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.**

பெருந்தலைவருக்கும் திராவிட இயக்கத்துக்குமான நட்பு என்பது கொள்கை நட்பு ஆகும். பெருந்தலைவரை ‘பச்சைத் தமிழர்’ என்று அழைத்தவர் தந்தை பெரியார். குடியாத்தம் இடைத்தேர்தலில் பெருந்தலைவர் போட்டியிட்டபோது எதிர்த்து வேட்பாளரை நிறுத்தாதவர் பேரறிஞர் அண்ணா. சொந்த மகனைப் போல இறுதி நிகழ்ச்சி நடத்தியவர் தமிழினத் தலைவர் கலைஞர்.

**“எனக்கு என்ன பெருமை என்றால், உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையிலும் எனது திருமணத்துக்கு வாழ்த்து தெரிவிக்க பெருந்தலைவர் அவர்கள் வந்திருந்தார்கள். அவரது வருகைக்காக திருமண மண்டபத்தையே கலைஞர் அவர்கள் மாற்றினார்கள். காமராசர் அவர்கள் வரும் வாகனம் நேரடியாக மேடைக்கு வரும் வகையில் மேடையை அமைத்தார் தலைவர் கலைஞர்” என்று இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.**

அரசு இடத்தில் பெருந்தலைவரை அடக்கம் செய்து நினைவு மண்டபம் கட்டியவர் முதலமைச்சர் கலைஞர். சென்னை கடற்கரைச் சாலைக்கு காமராசர் பெயர் சூட்டியதும் – கன்னியாகுமரியில் காமராசர் மணிமண்டபம் அமைத்ததும் – நெல்லையில் பெருந்தலைவர் காமராசருக்கு சிலை அமைத்ததும் –

**பெருந்தலைவரின் செயலாளராக இருந்த வைரவனுக்கு வேலை வழங்கி அரசு வீட்டை ஒதுக்கித் தந்ததும் – பெருந்தலைவரின் சகோதரி நாகம்மாளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து நிதி உதவி அளித்ததும் – பிரதமர் வி.பி.சிங் அவர்களிடம் வலியுறுத்தி சென்னை உள்நாட்டு விமான நிலையத்துக்குப் பெருந்தலைவர் காமராசர் பெயரை சூட்டக் காரணமாக இருந்ததும் – பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலை 15-ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாளாக அனைத்துக்கல்வி நிறுவனங்களிலும் கொண்டாட சட்டம் போட்டதும் – முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் என்பதையும் தமிழ்நாடு என்றும் மறக்காது.**

திருச்சியில் ‘திராவிட மாடல்’ ஆட்சியால் அமைக்கப்பட்டு வரும் மாபெரும் நூலகத்துக்குப் பெருந்தலைவர் காமராசர் பெயரைச் சூட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**பச்சைத் துரோகி பழனிசாமி, தனது பொய் நாக்கை சுருட்டி வைத்துக் கொள்ளவும்.**



வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர், கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்கள் காட்பாடி வட்டாட்சியர் பாலசந்தரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி உருவாக்கிய


# “Vote For DMK” தேர்தல் பிரச்சார வலைதளப் பக்கம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஏப். 7 - கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பாக தேர்தல் பிரச்சார வலைதளப் பக்கத்தை தன்னுடைய சமூகவலைதளப் பக்கங்களில் பதிவிட்டு முறைப்படி தொடங்கி வைத்துள்ளார்.**

Vote for DMK என்கிற இந்த வலைதளப் பக்கத்தில் தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கை, துறைவாரியாகவும், மாவட்ட வாரியாகவும் ‘திராவிட மாடல்’ அரசின் ஐந்தாண்டு கால சாதனைகள், வேட்பாளர் பட்டியல், சாதனைகளின் கார்ட்ஸ், வீடியோக்கள் பதிவிறக்கம் செய்யும் வசதி அனைத்தும் இடம் பெற்றுள்ளது.

தேர்தல் களத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கும், களப்பணியாற்றும் நிர்வாகிகளுக்கும் இந்த வலைதளப் பக்கத்தில் உள்ளவை மிகவும் பயனுள்ள கருத்தாயுதமாக இருக்கும் என்று தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.




### திருவண்ணாமலை – கள்ளக்குறிச்சி மாவட்டக் கழக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# திருவண்ணாமலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!



திருவண்ணாமலை, ஏப். 7 -

திருவண்ணாமலை வடக்கு, தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த கழக மற்றும் கூட்டணி இயக்கத்தின் வேட்பாளர்களை ஆதரித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலையில் தேர்தல் பிரச்சாரம் செய்ய உள்ளார்.

இதுகுறித்து பொதுப் பணித்துறை அமைச்சரும், வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பதாவது:-

நாளை (8.4.2026 - புதன்கிழமை) சரியாக மாலை 5.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, மாநகராட்சி அலுவலகம் எதிரில் அமைந்துள்ள கலைஞர் திடலில் திருவண்ணாமலை வடக்கு, தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த கழக மற்றும் கூட்டணி இயக்கத்தின் வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு தலைமை வகிக்கிறார்.

வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தரணி வேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எ.வ.வேலுவையும், கீழ்பென்னாத்தூர் கழக வேட்பாளர் கு.பிச்சாண்டி, ரிஷிவந்தியம் கழக வேட்பாளர் வசந்தம் க.கார்த்திகேயன், செங்கம் கழக வேட்பாளர் மு.பெ.கிரி, கலசப்பாக்கம் கழக வேட்பாளர் பெ.சு.தி.சரவணன், வந்தவாசி கழக வேட்பாளர் எஸ்.அம்பேத்குமார், செய்யாறு கழக வேட்பாளர் ஒ.ஜோதி, ஆரணி கழக வேட்பாளர் கோ.மகாலட்சுமி, கள்ளக் குறிச்சி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் கு.மாலதி, போளூர் தே.மு.தி.க. வேட்பாளர் பி.சரவணன், உளுந்தூர்பேட்டை கழக வேட்பாளர் ஜி.ஆர்.வசந்தவேல் ஆகியோரை ஆதரித்து, தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, கள்ளக்குறிச்சி மாவட்ட கூட்டணி இயக்கத்தைச் சேர்ந்த காங்கிரஸ், திராவிடர் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், தே.மு.தி.க., சி.பி.எம்., சி.பி.ஐ., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மையம், மனிதநேய மக்கள் கட்சி, எஸ்.டி.பி.ஐ., கொங்கு மக்கள் தேசியக் கட்சி, தமிழ்நாடு முன்னேற்றக் கழகம், இந்திய குடியரசுக் கட்சி, ஆதித்தமிழர் பேரவை, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் கட்சி, தந்தைப் பெரியார் திராவிடர் கழகம், தலித் விடுதலை இயக்கம், தமிழ்ப் புலிகள் கட்சி, சமத்துவ மக்கள் கழகம், ஆதித் தமிழர் கட்சி உள்ளிட்ட கூட்டணி இயக்க நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை வட்டக் கழக மற்றும் அணி சார்ந்த நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

நிறைவாக திருவண்ணாமலை மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு, தேர்தல் நடத்தும் அலுவலரும், வருவாய் கோட்டாட்சியருமான செல்வத்திடம், தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் காங்கிரஸ் மாவட்ட தலைவர் கே.குணசேகரன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் ச.நியூட்டன், எஸ்.பன்னீர்செல்வம், சி.சண்முகம் ஆகியோர் உள்ளனர்.